# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## (24.06.2015 முதல் 28.06.2015)

**அறிக்கை எண் 48/2015** **தேதி: 23.06.2015**

### மாநிலத்தின் கடந்த வார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 30°செ முதல் 38°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 23°செ முதல் 28°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 14°செ முதல் 17°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 11°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் ஒரு சில இடங்களில் இலேசான மழை காணபட்டது.

### எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (24.06.2015 முதல் 28.06.2015)

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 31°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 82 - 87 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 73 - 80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 17 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 24.06.15 | 1 | 31 | 23 | 7 | 82 | 73 | 17 | தென் மேற்கு |
| 25.06.15 | 1 | 31 | 23 | 7 | 83 | 74 | 17 | தென் மேற்கு |
| 26.06.15 | 4 | 31 | 23 | 7 | 85 | 78 | 17 | தென் மேற்கு |
| 27.06.15 | 8 | 31 | 23 | 7 | 86 | 79 | 17 | தென் மேற்கு |
| 28.06.15 | 5 | 31 | 23 | 7 | 87 | 80 | 17 | தென் மேற்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி இறவையில் மக்காச்சோளத்தினை விதைக்கும் முன் இமிடாகுளோபிரிட் 70WS மருந்தினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்து பின் விதைக்கவும்.
- ✓ மேகமூட்டத்துடன் காணப்படுவதால் மண் வழியாக உரமிடுவதை தவிர்க்கவும்.
- ✓ தக்காளி நாற்றாங்கால் அமைக்க இது நல்ல தருணம். விதைப்பதற்கு 24 மணி நேரத்திற்கு முன் 1 கிலோ விதைக்கு 4 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி அல்லது 10 கிராம் சூடோமோனாஸ் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கவும்.
- ✓ தொடர்ச்சியான மழை எதிர்பார்க்கப்படுவதால் கால்நடைகளை மேய்ச்சலுக்கு விடவேண்டாம்.
- ✓ காற்றின் வேகம் கூடுதலாக இருப்பதால் கரும்பின் தோகை உரிக்கவும். மேலும் 5 மாதங்களுக்கு மேற்பட்ட வாழையில் முட்டு கொடுக்கவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ வரும் 5 நாட்களுக்கு மழை எதிர்பார்க்கப்படுகிறது. கார் நெல் நடவினை சில நாட்கள் தள்ளி போடவும். மேகமூட்டத்துடன் காணப்படுவதால் மண் வழியாக உரமிடுவதை தவிர்க்கவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**